# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8093888

1. District : மாவட்டம் திருச்சிராப்பள்ளி PS: காவல்நிலையம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு Year: ஆண்டு 2019 FIR No.: மு.த.அ. எண் 11 Date: நாள் 25.10.2019

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Sections பிரிவுகள்: 7 & 7(a)

   (ii) Act சட்டம்: Act 1988 (As amended Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்: in 2018) Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 24.10.19 Date from : நாள் முதல் Date to : நாள் வரை

   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 1745 hrs Time to : நேரம் வரை 2230 hrs

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 25.10.2019 Time நேரம் 11.30 hrs

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக (கணினியால் தட்டச்சு செய்யப்பட்டது)

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 15 km கிழக்கு

   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி சார்பதிவாளர் அலுவலகம், திருவெறும்பூர், திருச்சி

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —

   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் ரா. ஞானமூர்த்தி (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் ராமன்

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 14.05.1974 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம் —

   (f) Occupation : தொழில் கணினி வடிவமைப்பு (g) Address : முகவரி திருச்சிராப்பள்ளி கிழக்கு வட்டம், திருச்சிராப்பள்ளி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   1) Tr. இ. ஆனந்தராஜன், 55/19 த/பெ இருதயராஜ், சார்பதிவாளர், திருவெறும்பூர் சார் பதிவாளர் அலுவலகம், திருச்சி.

   2) Tmt. செல்வி 36/19 D/o பாலன், W/o நாகராஜன், 33, வெள்ளாளர் தெரு, வேங்கூர் (இடைத்தரகர்) [illegible] 3) 10. [illegible] 21, [illegible] திருவெறும்பூர், தி[illegible]

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   — தாமதம் இல்லை —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்கு சிறப்பு நீதிமன்றம், திருச்சி அவர்கள் முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

நான் (G.சக்திவேல், காவல் ஆய்வாளர்) 25.10.2019 அன்று காலை 11.30 மணியளவில் திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, திருச்சி மாவட்ட ஆய்வு குழு அலுவலர் அவர்களால் நியமிக்கப்பட்ட திரு.ஞானமூர்த்தி, துணை வட்டாட்சியர், திருச்சிராப்பள்ளி கிழக்கு வட்டம், அவர்கள் என் முன்பாக ஆஜராகி, திருச்சி, திருவெறும்பூர் சார் பதிவாளர் அலுவலகத்தை 24.10.2019 அன்று மாலை 17.45 மணிக்கு நடத்தப்பட்ட திடீர் சோதனை செயல்முறைகளின்படி நடவடிக்கை எடுக்கவேண்டி, மேற்படி திடீர் சோதனை செயல்முறைகளை இணைத்து, 25.10.2019 தேதியிட்ட வேண்டுகோள் கடிதம் மூலமாக கொடுத்தார். மேற்படி வேண்டுகோள் கடிதம் மற்றும் திடீர்

(தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரில 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் [illegible] பதவி காவல் ஆய்வாளர் நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ஊ.த.க.பிரிவு, திருச்சி காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 25/10/19

[signature] 25.10.19

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 25.10.2019
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் ஜி.சக்திவேல்
Rank: நிலை காவல் ஆய்வாளர் No. எண் .........
ஊ.த.க.பிரிவு,
திருச்சி.

GCP-240-34(Type-2) 90,000 Cps -21 3 16(HCL-12)p 2

திருச்சி ஊ.த.க. பிரிவு கு.எண்.11/2019 இன் முதல் தகவல் அறிக்கை தொடர்ச்சி.......

சோதனை செயல்முறைகள் பின்வருமாறு அனுப்புநர் திரு.ஞானமூர்த்தி, துணை வட்டாட்சியர், திருச்சிராப்பள்ளி கிழக்கு வட்டம், திருச்சிராப்பள்ளி. பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருச்சிராப்பள்ளி. அய்யா, நான் திருச்சி கிழக்கு வட்டாட்சியர் அலுவலகத்தில் துணை வட்டாட்சியராக பணிபுரிந்து வருகிறேன். 24.10.2019 மாலை சுமார் 04.00 மணி அளவில் திருச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் செயல்பட்டுவரும் மாவட்ட ஆய்வுக்குழு அதிகாரி என்னைஆய்வுக்குழு பணிக்கு என்னை தற்காலிகமாக நியமித்துள்ளதாக தெரிவித்தார். இதற்கிடையில் திருச்சி ஊ.த.க பிரிவு அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்ற தொலைபேசி ரகசிய தகவலின் அடிப்படையில், 24.10.2019ம் தேதி, மாலை சுமார் 05.00 மணியளவில், திருச்சி ஊ.த.க பிரிவு அலுவலகத்திலிருந்து காவல் ஆய்வாளர் திரு.சக்திவேல், மற்றும் விஜிலென்ஸ் குழுவினருடன் தகவல் தெரிவிக்கப்பட்டதன் பேரில் வந்த அலுவல் சாட்சி திரு.கார்த்திக், த/பெ.தங்கசாமி கிராம நிர்வாக அலுவலர், கொண்டயம்பேட்டை கிராமம், ஸ்ரீரங்கம் வட்டம், திருச்சி ஆகியோருடன் புறப்பட்டு, திருச்சிராப்பள்ளி மாவட்டம் திருவெறும்பூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் 24.10.2019 மாலை 17.45 மணி முதல் 22.30 மணி வரை திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது, சோதனையின்போது திருவெறும்பூர் சார்பதிவாளர் திரு.ஆனந்தராஜன் பயன்படுத்தும் கேரி பையிலிருந்து ரூ.1,07,000/–மும் அதே அலுவலகத்தில் இருந்த தனி நபர் / இடைத்தரகர் திரு.அப்பாஸ் அலி என்பவரிடமிருந்து ரூ.24,500/–மும், ஆவண எழுத்தர் திருமதி.செல்வி என்பவரிடமிருந்து ரூ.34,000/–மும் ஆகமொத்தம் ரூ.1,65,500/– கைப்பற்றப்பட்டு, திடீர் சோதனை செயல்முறைகள் தயார் செய்யப்பட்டது. மேற்படி திடீர் சோதனை செயல்முறைகளின்படி சந்தேகத்திற்குமிடமான முறையில் கணக்கில்வராத கையூட்டு பணம் வைத்திருந்த மேற்படி நபர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. இத்துடன் 24.10.2019ம் தேதி தயார் செய்யப்பட்ட திடீர் சோதனை செயல்முறைகள் இணைக்கப்பட்டுள்ளது. தங்கள் உண்மையுள்ள, (கையொப்பம்) ரா.ஞானமூர்த்தி 25.10.19. Submitted, Sir, Today 25.10.2019 at 11.30 hrs. received the complaint and registered a case in Trichy V&AC Cr.No. 11/2019 U/s 7 & 7(A) of the PC Act (Amended 2018) at 12.00 hrs on 25.10.2019 (signed) G.Sakthivel, 25.10.19, Inspr of Police, V&AC, Trichy.

**திடீர் சோதனை செயல்முறை (மகஜர்)** இன்று 24.10.2019 மாலை 17.45 மணிக்கு திருச்சி, காட்டூர், வின்நகர் 11 வது தெருவில் அமைந்துள்ள திருச்சி மாவட்டம், திருவெறும்பூர் சார்பதிவகத்தில், பதிவு உள்ளிட்ட ஏனைய அரசு அலுவல்களை செய்து கொடுக்க க்ஷ சார்பதிவக பணியாளர்கள், நேரடியாகவும், ஆவண எழுத்தர்கள் மற்றும் இடைத்தரகர்கள் மூலமாகவும் கையூட்டு கேட்டுப்பெறுவதாக கிடைத்த தகவலின் பேரில், திருச்சி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அவர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது, அவர்களால் நியமிக்கப்பட்ட திரு.ஞானமூர்த்தி, த/பெ.ராமன், துணை வட்டாட்சியர், திருச்சிராப்பள்ளி கிழக்கு வட்டம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திரு.சக்திவேல் மற்றும் அவாது குழுவினர் உதவியுடன் வேண்டுகோளின்பேரில் வந்திருந்த அலுவல் சாட்சி திரு.கார்த்திக், த/பெ.தங்கசாமி கிராம நிர்வாக அலுவலர், கொண்டயம்பேட்டை கிராமம், ஸ்ரீரங்கம் வட்டம், திருச்சி முன்னிலையில் மேற்கொள்ளும் திடீர் சோதனையின் செயல்முறை நடவடிக்கைகள் பொருத்து மடிக்கணினி மூலம் தயார் செய்யப்படும் செயல்முறை நடவடிக்கை மகஜர். திருச்சி, காட்டூர், வின்நகர், 11வது தெருவில் அமைந்துள்ள திருவெறும்பூர் சார்பதிவாளர் அலுவலகத்தை இன்று 24.10.2019 மாலை சுமார் 17.45 மணிக்கு க்ஷ அலுவலர்கள் க்ஷ சார்பதிவக அலுவலகத்தை முன்னறிவிப்பின்றி திடீர் சோதனை செய்வதற்கு க்ஷ சார்பதிவக அலுவலக முன்பக்க பிரதான கதவு வழியே உள்ளே நுழைந்தும் க்ஷ சார்பதிவகத்தை சுற்றி நான்கு திசைகளிலும் காவலர்களை பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டது. அலுவலக வராண்டாவில் சந்தேகப்படும்படியாக சில நபர்கள் சுமார் 50 வயது மதிக்கதக்க ஒரு நபரை சுற்றி நின்று பேசிகொண்டிருந்தார்கள், அப்போது அந்த ஒரு நபர் அவசர அவசரமாக அலுவலகத்தின் உள்ளே சென்று, சார்பதிவாளர் இருக்கையில் போய் அமர்ந்து கொண்டார். மேற்படி அலுவலக வராண்டாவில் நின்று கொண்டிருந்த நபர்களை அழைத்து வந்து மேற்படி அலுவலகத்தின் பொது மக்கள் காத்திருக்கும் அறையில் அமரச் செய்து அவர்கள் அருகில் காவலர்களை நிற்க செய்யப்பட்டது. அலுவலகத்தின் அனைத்து அறைகளுக்கும் காவலர்களை அனுப்பி பாதுகாப்புக்காக நிற்க செய்யப்பட்டது. சார்பதிவாளர் மற்றும் அங்கு பணியாற்றும் பணியாளர்கள் அனைவருக்கும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு குழுவினரையும், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலரால் நியமிக்கப்பட்ட அலுவலரையும், அரசு சாட்சியையும் அறிமுகப்படுத்திக் கொண்டும், திடீர் சோதனை செய்ய வந்த

விபரத்தை கூறியும் சோதனை தொடங்கப்பட்டது. சார்பதிவாளர் பெயரை கேட்க அவர் தன் பெயர் திரு.ஆனந்தராஜன், சார்பதிவாளர் என்றும் தெரிவித்தார். ஆய்வுக்குழு அலுவலர் சார்பதிவகத்தின் உள்ளே நுழைந்ததும் வராண்டாவில் நின்றிருந்த நபர்களை பொதுமக்கள் காத்திருக்கும் அறையில் வைத்து விசாரிக்க பின்வருமாறு விபரம் தெரிவித்தார்கள் 1)திரு.அப்பாஸ் அலி, வயது.44/2019, த/பெ.சம்சுதீன், 21 முல்லைவாசல் தெரு, தீனதயாளன் நகர், திருவெறும்பூர், திருச்சி–13 என்றும், தான் ரியல் எஸ்டேட் புரோக்கராக இருந்து வருவதாகவும் தெரிவித்தார். மேலும் அவரை சோதனை செய்ய அவரின் டவுசர் வலது பக்க பாக்கெட்டில் இருந்து 2000, 500, 100 ரூபாய் நோட்டுக்களாக பணம் வைத்திருந்தார். அப்பணத்தை மாவட்ட ஆய்வு குழு அலுவலர் மூலம் எண்ணிப்பார்க்க ரூ.24,500/– பணம் இருந்தது. அந்தப்பணம் பற்றிய விபரம் தனிநபர் திரு.அப்பாஸ் அலியிடம் கேட்க எதுவும் தெரிவிக்காமல் அமைதியாக இருந்தார். மேற்படி பணம் ரூ.24,500/– பத்திரம் பதிவு செய்யும் பொதுமக்களிடமிருந்து சார்பதிவாளருக்காக கையூட்டாக பெற்று வைத்திருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் மேற்படி பணம் ரூ.24,500/– காவல் ஆய்வாளரால் கைப்பற்றப்பட்டது. மேற்படி திரு.அப்பாஸ் அலி தெரிவித்த விபரங்களை காவல் ஆய்வாளர் தனி வாக்குமூலமாக பதிவு செய்தார். மேலும், திரு.அப்பாஸ்அலியிடம் வேறு பணம் எதுவும் உள்ளதா என கேட்க, தன்னுடைய சட்டையின் இடது மேல் வெளிபுற பாக்கெட்டிலிருந்து ரூ.130/– எடுத்து ஆஜர் செய்தார். அப்பணம் பற்றி கேட்க, அப்பணம் தன்னுடைய சொந்தப்பணம் என்று தெரிவித்ததால், அப்பணம் ரூ.130/– அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. 2)திருமதி.செல்வி, வயது 36/2019, க/பெ.பாலன், நெ.33, வெள்ளாளர் தெரு, வேஙகூர், திருவெறும்பூர் தாலுக்கா, திருச்சி என்றும், தான் ஆவண எழுத்தராக இருந்து வருவதாகவும் தெரிவித்தார். மேலும் அவரை பெண் காவலரை வைத்து சோதனை செய்ய அவரிடம் 2000 ரூபாய் நோட்டுக்களாக கையில் சுருட்டி வைத்திருந்தார். அப்பணத்தை மாவட்ட ஆய்வு குழு அலுவலர் மூலம் எண்ணிப்பார்க்க ரூ.34,000/– பணம் இருந்தது. அந்தப்பணம் பற்றிய விபரம் தனிநபர் திருமதி.செல்வியிடம் கேட்க எதுவும் தெரிவிக்காமல் அமைதியாக இருந்தார். மேற்படி பணம் ரூ.34,000/– பத்திரம் பதிவு செய்யும் பொதுமக்களிடமிருந்து சார்பதிவாளருக்காக கையூட்டாக கொடுக்க பெற்று

வைத்திருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் மேற்படி பணம் ரூ.34,000/– காவல் ஆய்வாளரால் கைப்பற்றப்பபட்டது. மேற்படி திருமதி.செல்வி தெரிவித்த விபரங்களை காவல் ஆய்வாளர் தனி வாக்குமூலமாக பதிவு செய்தார். மேலும், திருமதி.செல்வியிடம் வேறு பணம் எதுவும் உள்ளதா என கேட்க, தன்னிடம் வேறு பணம் ஏதுமில்லை என்று தெரிவித்தார். பார்வையாளர் அமரும் ஹாலில் அமர்ந்திருந்த தனி நபர்களிடம் விசாரிக்க, திருச்சி, காட்டூரைச் சேர்ந்த வைரமணி என்பவரின் மருமகன் சரவணன் என்றும், திருச்சி, காட்டூரைச் சேர்ந்த கண்ணப்பன் மகன் நாகப்பன் என்றும், திருச்சி காட்டூரைச் சேர்ந்த பழனியாண்டி மகன் ஜெகன்நாத் என்றும், திருச்சி உறையூரைச் சேர்ந்த மைக்கேல்ராஜ் மகன் பிரபு மற்றும் திருச்சி, செம்பட்டு திருவளர்ச்சிப்பட்டியை சேர்ந்த பிச்சை பாண்டுரார் மகன் பழனிச்சாமி என்றும் தெரிவித்தார்கள். தாஙகள் பதிவு செய்த பத்திரஙகளை பெறுவதற்காகவும் மற்றும் விபரம் கேட்க வந்திருப்பதாகவும் தெரிவித்தார்கள். அவர்களை சோதனை செய்ய, (1)திரு.சரவணனிடம் ரூ.1,450/–ம், (2)திரு.நாகப்பனிடம் ரூ.7,840/–ம் (3)திரு.ஜெகன்நாத்திடம் ரூ.23,000/–ம், 4)திரு.பிரபுவிடம் ரூ.17,020/–ம் மற்றும் 5)திரு.பழனிச்சாமியிடம் ரூ.18,600/–ம் இருந்தது. மேற்படி பணம் பற்றி கேட்க, அந்த பணம் தஙகளுடைய சொந்தப்பணம் என்றும் அதற்கான விபரம் தெரிவித்ததால், மேற்படி பணம் அவர்களிடமிருந்து கைப்பற்றப்படவில்லை. மேற்படி பொதுமக்கள் காத்திருக்கும் அறையிலிருந்து உள்ளே நுழைந்ததும் ஹாலும், அந்த ஹாலின் மேற்கு பக்கம் கண்ணாடியினாலான குளிரூட்டப்பட்ட கணிப்பொறி அறை உள்ளது, அந்த ஹாலின் தெற்கு சுவர் ஓரத்தில் ஒரு பெண்ணும் அதற்கு எதிரே வடக்கு பக்கத்தில் ஒரு ஆணும் இருந்தார்கள். அவர்கள் பெயர் பற்றி கேட்க (1)திருமதி.அடைக்கலராணி, உதவியாளர் என்றும் மற்றும் எதிரே அமர்ந்திருந்த நபரின் பெயர் பற்றி கேட்க (2)திரு.ஜெயராமன், அலுவலக உதவியாளர் என்றும் தெரிவித்தார்கள், மேற்படி ஹாலின் வடக்கு பக்கம் உள்ள கண்ணாடி அறையில் வடமேற்கு மூலையில் மேற்கு பார்த்து சார்பதிவாளர் இருக்கை உள்ளது அதில் சார்பதிவாளர் திரு.ஆனந்தராஜன் அமர்ந்திருந்தார் அவருக்கு தெற்கு பக்கம் இரண்டு பெண்கள் அடுத்தடுத்து அமர்ந்திருந்தனர் அவர்களின் பெயர் மற்றும் பதவி பற்றி விசாரிக்க, முதலாவது இருந்த நபர் சண்முகப்பிரியா, இளநிலை உதவியாளர் என்றும், அதற்கு அடுத்து அமர்ந்திருந்த நபர் பாக்கியலெட்சுமி, கணினியில் விபரஙகளை பதிவு செய்பவர்

என்றும் தெரிவித்தார்கள். அதனை அடுத்து கிழக்கு பக்கம் முதல் தளத்திற்கு செல்லும் படிகட்டுகளும், அதற்கு கிழக்கு பக்கம் மர பீரோ மற்றும் இரும்பு ரேக் ஆகியவை பதிவேடுகள் மற்றும் பொருட்கள் வைக்கப்பட்டிருந்தது. அதற்கு தெற்கே கழிவறைகள் அமைந்துள்ளது. மேற்படி அலுவலகத்தில் அனைத்து அறைகளையும் சோதனை செய்யப்பட்டபோது, சார்பதிவாளர் அமர்ந்திருந்த கண்ணாடி அறைக்கு பின்புறம் உள்ள முதல் தளத்திற்கு செல்லும் படிகட்டுகளுக்கு கிழக்கு பக்கம் இருந்த இரும்பு ரேக்கை சோதனை செய்ய, அதன் இரண்டாவது அடுக்கில் பதிவேடுகளின் மேலிருந்த BG நாயுடு ஸ்வீட்ஸ் என்று எழுதப்பட்ட வெள்ளை கலர் கேரி பேக்கை சோதனை செய்த போது அதில், 2000, 500 ஆகிய ரூபாய் நோட்டுக்கள் கத்தையாக இருந்தது, மேலும் அதில் மாத்திரைகள் மற்றும் மூக்கு கண்ணாடி ஆகியவை இருந்தன. அவற்றை ஆய்வு குழு அலுவலர் மூலம் எண்ணிப்பார்க்க மொத்தம் ரூ.1,07,000/– இருந்தது. மேற்படி கேரி பேக் யாருடையது சார்பதிவாளரிடம் கேட்க, மேற்படி கேரி பேக் தன்னுடையது என்றும், அதில் தனது மருந்து மாத்திரை மற்றும் மூக்கு கண்ணாடி ஆகியவற்றை வைத்திருந்ததாக தெரிவித்தார். அதில் இருந்த பணம் ரூ.1,07,000/– பற்றி கேட்க, மேற்படி பணம் பற்றிய விபரம் எதுவும் தெரிவிக்காமல் அமைதியாக இருந்தார். பின்னர் மேற்படி பணம் எவ்வாறு எனது மருந்து மாத்திரை வைத்திருந்த கேரி பேக்கிற்கு வந்தது என்று எனக்கு தெரியாது என முன்னுக்கு பின் முரணாக தெரிவித்தார். மேற்படி சார்பதிவாளர் திரு.ஆனந்தராஜன் தெரிவித்த விபரங்களை காவல் ஆய்வாளர் தனி வாக்குமூலமாக பதிவு செய்தார். மேலும், அப்பணம் ரூ.1,07,000/– பற்றி கேட்க, யாரும் உரிமை கோராததாலும், மேற்படி பணம் பற்றிய எவ்வித விளக்கமும் தெரிவிக்காததாலும், மேற்படி பணம் ரூ.1,07,000/– பத்திர பதிவு செய்யவரும் நபர்களிடமிருந்து கையூட்டாக கேட்டுப்பெற்று வைத்திருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் மேற்படி பணம் ரூ.1,07,000/– மற்றும் BG நாயுடு ஸ்வீட்ஸ் என்று பிரிண்ட் செய்யப்பட்ட வெள்ளை கலர் கேரி பேக் ஆகியவை காவல் ஆய்வாளர் திரு.சக்திவேல் அவர்களால் இந்த திடீர் சோதனையில் மேல்நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. அந்த கேரி பேக்கிலிருந்த சார்பதிவாளர் திரு.ஆனந்தராஜன் அவர்களின் மருந்து மாத்திரை மற்றும் மூக்கு கண்ணாடி ஆகியவை அவரிடமே திரும்ப வழங்கப்பட்டது. கணிப்பொறி அறையில் இன்று பதிவு செய்யப்பட்ட ஆவணங்களை சரிபார்த்ததில் 'அ' கணக்கில் 40 பதிவுகள்

செய்யப்பட்டு, அதற்கான தொகை ஆன்லைன் epayment மூலமாக கட்டணமாக செலுத்தப்பட்டுள்ளது. B, C மற்றும் D கணக்கில் இன்றைய தினம் பதிவுகள் எதுவும் இல்லை. வில்லங்கச்சான்று கேட்டு விண்ணப்பங்கள் எதுவும் பெறப்படவில்லை. சார்பதிவாளர் திரு.ஆனந்தராஜனிடம் வேறு பணம் எதுவும் உள்ளதா என்று கேட்க, அவர் தன்னிடம் பணம் எதுவும் இல்லை என்று தெரிவித்தார். கொடி நாள் வசூல் தொடர்பாக சார்பதிவாளர் திரு.ஆனந்தராஜனிடம் கேட்க கொடி நாள் வசூல் 21.08.2019 தேதியுடன் முடிக்கப்பட்டது என்றும், இன்று 24.10.2019 கொடிநாள் வசூல் செய்யவில்லை என்றும் தெரிவித்தார். மேலும், அலுவலகத்தில் உள்ள மற்ற அனைத்து நிரந்தர மற்றும் தற்காலிக பணியாளர்களில், பெண் பணியாளரை பெண் காவலர் மூலமும் மற்றவர்களை ஆண்காவலர்கள் மூலமும் சோதனை செய்து பார்க்க அவர்கள் சொந்த செலவிற்காக வைத்திருந்த சொற்ப தொகைகளை தவிர வேறு பணம் எதுவும் இல்லை. ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க கணிணியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட 24.10.2019ம் தேதிக்கான A கணக்கு விபரம் உண்மை நகலிட்டு பெறப்பட்டது. மேலும், திருவெறும்பூர் சார்பதிவாளர் அலுவலக 2019 ஆம் ஆண்டு வருகைப் பதிவேட்டை கேட்க கூஷ சார்பதிவாளர் திரு.ஆனந்தராஜன் ஆஜர் செய்தார். அப்பதிவேட்டில் 2019 ஜனவரி மாதம் 2ம் தேதி முதல் 24.10.2019 தேதிவரை குறிப்புகள் காணப்பட்டது. திருவெறும்பூர் சார்பதிவக அலுவலர்களின் தனிநபர் இருப்பு பதிவேட்டை கேட்க கூஷ சார்பதிவாளர் திரு.ஆனந்தராஜன் ஆஜர் செய்தார். அப்பதிவேட்டில் 2019 ஜனவரி மாதம் 2ம் தேதி முதல் 24.10.2019 தேதிவரை குறிப்புகள் காணப்பட்டது. மேலும், திருவெறும்பூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரிந்த தகவல் தொகுப்பூதிய பணியாளரின் 2019 ஆம் ஆண்டு வருகைப்பதிவேட்டை கேட்க கூஷ சார்பதிவாளர் திரு.ஆனந்தராஜன் ஆஜர் செய்தார். அப்பதிவேடுகளை இந்த திடீர் சோதனையின் மேல்நடவடிக்கைக்காக ஆய்வாளர் திரு.சக்திவேல் அவர்களால் கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் சோதனை இரவு 22.30 மணிக்கு முடிக்கப்பட்டது. (திடீர் சோதனை செயல்முறைகளில் 5 பக்கங்களின் அடியில் மாவட்ட ஆய்வுகுழு அலுவலர்களர் ஆய்வுக்குழு அலுவலராக நியமிக்கப்பட்ட திரு.திரு.ஞானமூர்த்தி, துணை வட்டாட்சியர், திருச்சிராப்பள்ளி கிழக்கு வட்டம், அலுவல் சாட்சி திரு.கார்த்திக், த/பெ.தங்கசாமி கிராம நிர்வாக அலுவலர், கொண்டயம்பேட்டை கிராமம், ஸ்ரீரங்கம் வட்டம், திருச்சி, திருச்சி காவல் ஆய்வாளர் திருமதி.அருள்ஜோதி ஆகியோர்

கையொப்பம் செய்துள்ளனர். 5–வது பக்கத்தில் மட்டும் மேற்படி மூன்று அலுவலர்களும், திருவெறும்பூர் சார்பதிவாளர் திரு.எம்.ஐ,ஆனந்தராஜன், திருமதி.செல்வி, திரு.அப்பாஸ்அலி), அவ்வலுவலக உதவியாளர் திருமதி.அடைக்கலராணி ஆகியோர் கையொப்பம் செய்துள்ளனர். மேற்படி திடீர் சோதனை செயல்முறையில் கண்டுள்ள நபர்களான எதிரி 1)திரு.இ.ஆனந்தராஜன், வயது.55/2019, த/பெ.இருதயராஜ், சார்பதிவாளர், திருவெறும்பூர் சார்பதிவாளர் அலுவலகம், திருவெறும்பூர் வட்டம், திருச்சிராப்பள்ளி மாவட்டம், 2)திருமதி. பா. செல்வி, வயது.36/2019, த/பெ.பாலன், க/பெ. நாகராஜன், 33, வெள்ளாளர் தெரு, வேங்கூர், திருவெறும்பூர் வட்டம், திருச்சி மாவட்டம், 3)திரு.அப்பாஸ்அலி, வயது.44/2019, த/பெ.சம்சுதீன், 21, முல்லைவாசல் தெரு, தீனதயாளன் நகர் (டி நகர்), திருவெறும்பூர், திருச்சி மாவட்டம் ஆகியோர் மீது திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு குற்ற எண்.11/2019, 7 & 7(A) ஊழல் தடுப்புச் சட்டம் (Amended 2018)–ன் படி இன்று 25.10.2019 தேதி காலை 12.00 மணிக்கு குற்ற வழக்கு பதிவு செய்யப்படுகிறது.

இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை அசல், திருச்சி மாவட்ட ஆய்வு குழு அலுவலரால், ஆய்வுக்குழு அலுவலராக நியமிக்கப்பட்ட திரு.ஞானமூர்த்தி, துணை வட்டாட்சியர், திருச்சிராப்பள்ளி கிழக்கு வட்டம், அவர்கள் கொடுத்த 25.10.2019 தேதியிட்ட கடிதம் மற்றும் 24.10.2019 தேதியில் தயார் செய்யப்பட்ட திடீர் சோதனை செயல்முறைகள் ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்கு சிறப்பு நீதிமன்றம், திருச்சி அவர்கள் முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது. இந்த முதல் தகவல் அறிக்கையின் நகல் மற்றும் தொடர்புடைய ஆவணங்களை இவ்வழக்கின் மேல் விசாரணைக்காக திருமதி.அருள்ஜோதி, காவல் ஆய்வாளர், ஊ.த.க. பிரிவு, திருச்சி அவர்களிடம் ஒப்படைத்தும், இதர நகல்களை சம்பந்தப்பட்ட மேல் அதிகாரிகளுக்கு மேல் நடவடிக்கைக்காக அனுப்பி வைக்கப்படுகிறது.

G [signature] 25.10.19
Insp. of Police
VSAC
Trichy.